1981 பிப்ரவரி 26] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 5 முதல் 24 வரை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிறு விவகாரம். இதற்கு முன்னால் லிட்டர் மீது சேல்ஸ் டாக்ஸ் போட்டுக் கொண்டிருந்தார்கள். அது கூடாது என்று சொல்லி இப்போது அதன் விலையின் மீதே விற்பனை வரியைப் போட்டு உயர்த்தலாம் என்பதுதான் மசோதாவின் உள்நோக்கம். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார் என்று நாம் பார்க்க வேண்டும். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அப்படி மாற்றி யிருக்கிறார்கள். ஆகவே, நாங்களும் மாற்றிக் கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது சரியான வாதம் என்று படவில்லை. மற்ற மாநிலத்துக்காரர்கள் எதை எதைச் செய் கிறார்களோ அதையெல்லாம் இவர்கள் செய்யத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. மற்ற மாநிலத்துக் காரர்கள் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத் தடைச் சட்டத் தைக் கொண்டு வரவில்லை. ஆனால் நீங்கள் கொண்டு வரு கிறீர்கள். இதிலே மட்டும் மற்ற மாநிலங்களைப் பின்பற்று வதாகக் கூறுகிறார்கள். லிட்டர் மீது போடப்பட்ட சேல்ஸ்

* 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 26

டாக்சை பிரைஸ் மீது கொண்டு வருகிற காரணத்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. எடுத்துக் காட்டாகச் சொல்லுகிறேன் — பதினைந்து லிட்டர் பெட்ரோல் ஒரு நாளைக்கு வண்டிக்குப் போடுகிறேன் என்றால் அந்த 15 லிட்டருக்கு மட்டுந்தான் சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டும். இப்போது என்னுடைய கன்சம்ஷன் ஆப் பெட்ரோல் 15 லிட்டர் என்று வைத்துக் கொண்டால் அடுத்த மாதம் இதே 15 லிட்டர் பெட்ரோலுக்கு பெட்ரோல் விலையின் அடிப்படையில் சேல்ஸ்டாக்ஸ் கட்டும் போது அது உயரும். நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகும். பட்ஜெட்டுக்கு பட்ஜெட் விலை ஏறிக் கொண்டே போகும். ஏறிக் கொண்டு போகிற விலைக்கு. சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டும். பெரிய, பெரிய கம்பெனிகள், நிர்வாகங்கள் பரவாயில்லை, கட்டிக்கொண்டிருக்கலாம். ஆனால், சாதாரண கார், ஸ்கூட்டர் வைத்திருப்பவர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுவார்கள். இதிலேகூட வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள், மேலே இருப்பவர்கள் என்பது போல, பெட்ரோல் அதிகமான அளவில் 200 லிட்டர், 300 லிட்டர் என்று உபயோகப்படுத்துகிறவர்கள் பெட்ரோல் கோட்டிற்கு மேலே இருப்பவர்கள் என்றும் மற்றவர்கள் பெட்ரோல் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் என்ற புதிய 'தீசிஸ்' தரலாம். 'தீசிஸ்' தருவதிலே நாம் தான் கெட்டிக்காரர்கள் ஆயிற்றே. எனவே, சாதாரண ஸ்கூட்டர் வைத்துக்கொண்டு அலுவலகத்திற்கு போய் வருகிறவர் கூட பெட்ரோல் விலையின் மீதே சேல்ஸ் டாக்ஸ் கட்டவேண்டுமென்றால், கூட்டு வட்டி ஏறுவதைப் போல கடைசியில் நிறைய தொகையை செலுத்தியாக வேண்டிய நிலை உருவாகும். நீங்கள் விலை ஏற்றினால், மத்திய சர்க்காரும்ஏற்றும், ஆனால், இரண்டு நிலைகளிலும் கட்ட வேண்டியவன் சாதாரண குடிமகனாக இருக்கிறான். எனவே, அரசு இதில் ஆவன செய்து, சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்பது போல—கொஞ்சமாக பெட்ரோல் உபயோகப்படுத்துபவர்கள்,—என்று ஒரு வகையாகப் பிரித்து அவர்களுக்கு லிட்டர் மீதுதான் சேல்ஸ் டாக்ஸ் என்று ஒரு பாகுபாடு செய்து ஒரு புதிய வழியை கண்டுபிடிக்கிற வகையில் இந்த மசோதாவை நிறுத்தி வைத்து, இதை அமைச்சர் அவர்கள் பொறுக்கு கமிட்டிக்கே கூட அனுப்பி வைக்கலாம். வேறு டெக்னிக்கல் சப்ஜெக்ட்கள் இதிலே உள்ளடங்கி இருக்கிற காரணத்தால், இதை ஒரு பொறுக்கு கமிட்டிக்கு அனுப்பி ஆராய்ந்து பிறகு இதை கொண்டு வரலாமென்று கூறி அமருகிறேன்.

[981 பிப்ரவரி 26]

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதா வின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு உலகத்திலே இருக்கிற பெரிய பெரிய வல்லரசுகளை எல்லாம் ''ஒபெக்'' என்று சொல்லப்படுகிற எண்ணெய் உற்பத்தி செய்கிற நாடுகளை எல்லாம் ஆட்டிப்படைக் கிற நிலையிலேதான், நம்முடைய தமிழ்நாட்டிலே அதனுடைய பலனை அனுபவிக்கவேண்டுமென்பதற்கு கடந்த காலத்தில், எண்ணெய் மீது போடப்பட்ட வரியை மாற்றி, இன்றைக்கு லிட்டருடைய விலையின்மீது மற்ற மாநிலங்களில் ஏற்பட்டிருக் கிறதைப்போல தமிழ் நாட்டிலும் நம்முடைய அமைச்சர் அவர் கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒருவகையில் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந் தாலும், எனக்கு முன்னால் பேசிய திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதைப் போல சாதாரண கிராமங்களில் வாழ்கின்ற ஏழை விவசாயிகள் தங்களது தேவையான டீசல் எண்ணெய் விவசாய உற்பத்திக்காக வாங்குகின்ற நேரத்திலே அவனால் வாங்க இயலாத நிலையிலே, விலை அடிப்படையில் இந்த வரியை போட்டிருப்பது சற்று அதிகமான சுமையை அவன் மீது திணிக்கப்படுவதாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே, இதிலே ஆடம்பரமாக வாழ்கின் றவர்களுக்கு, உல்லாசமாக வாழ்கின்றவர்களுக்கு இது பொருத்த மாக இருந்தாலும் கூட கிராமங்களில் வாழ்கின்ற ஏழை விவசாயி களுக்கு தேவையான பெட்ரோலாக இருந்தாலும் சரி, டீசலாக இருந்தாலும் சரி அவர்களுக்கு வரிச்சலுகை என்ற பெயரால் ஏதாவது ஒரு சலுகையினை அளித்து அவர்களுக்கு இந்த சுமையை திணிக்காமல் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. மு அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரி எண்ணெய் மீது, டீசல் மீது மத்திய சர்க்கார் வரி விதிக்கிறது. மாநில அரசாங்கமும், மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல டீசல், பெட்ரோலுக்கு லிட்டர் என்பதற்கு பதிலாக அதனுடைய ரூபாய் மதிப்பின் மீது வரி விதிக்க இருக் கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலே குறிப்பாக முதல் முதல் விற்பனை, அதிகமான விகிதாச்சார வரி என்று இதிலே போடப்பட்டிருக்கிறது. பெட்ரோல் 5 சதவீதம்; விமான எரி பொருள் 7 சதவீதம்; உயர்வேக டீசல் 9 சதவீதம்; லேசான டீசல் எண்ணெய் 9 சதவீதம்; மண்ணெண்ணெய் $8\frac{1}{2}$ சத வீதம். ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வாங்குகின்ற நிலை போய், அதனுடைய ரூபாய் மதிப்பில் வரி விதிப்பதால் 17 சத வீதம் அவர்கள் வரி கட்ட வேண்டிய நிலை ஏற்படும்

[திரு. மு. அம்பிகாபதி] [1981 பிப்ரவரி 26

(நண்பகல் 12.00).

மண்ணெண்ணெய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள், இங்கே உள்ள விளக்கத்தில் குறிப்பிடுகின்றபொழுது, முதல் விற்பனை எது என்பதைப்பற்றித் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஒரு எண்ணெய்க் கம்பெனி மற்றொரு எண்ணெய் கம்பெனிக்கு விற்பனை செய்வது முதல் விற்பனை அல்ல; ஒரு எண்ணெய் கம்பெனி தனி நபருக்கு விற்பனை செய்தால் அதுதான் முதல் விற்பனை என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கம்பெனியிலேயிருந்து இன்னொரு கம்பெனிக்கு விற்கப்படுகின்றபொழுது வரி விதித்தால் என்ன? கம்பெனியிலிருந்து தனி நபருக்கு விற்பனை செய்யப்படும்பொழுது ஏன் வரி விதிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விமான எண்ணெய்க்கு 7 சதவீதம், ஆனால், சாதாரண மண்ணெண்ணெய்க்கு $8\frac{1}{2}$ சதவீதம். இன்றைக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. கியூவிலே நின்று மண்ணெண்ணெய் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

டீசல் எண்ணெய்க்கு 9 சதவீதம் போட்டிருப்பது விவசாயிகளைக் கடுமையாகப் பாதிக்கும். ஏற்கெனவே அவர்கள் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். டீசலுக்கு 9 சதவீதம் ரூபாயின் மீது 9 சதவீதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் குலேபகாவலி சினிமாவில் தடுக்கி விழுந்தால் வரி, குனிந்துநிமிர்ந்தால்வரி, இட்டிலி வரி, சட்டினி வரி, பட்டினி வரி, தாலியைக் கட்டிய குடும்பம் என்று சொன்னால் அவனும் தரணும் சம்சார வரி, தாலி கட்டாமல் இருந்தால் அவனும் தரணும் பிரம்மச்சாரி வரி'' என்று பாட்டுப் பாடுவார்கள். குலேபகாவலி திரைப்படத்தில் அந்தப் பாட்டு வரும், பகாவலி நாட்டிலே வரி போட்டார்கள் என்று. ஆகவே, இவ்வாறு வரி விதிக்கும் முறைகள் சரி அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு முனை வரியாக கம்பெனியிலேருந்து இன்னொரு கம்பெனி வாங்கினால் அங்கேயே வசூலிக்க வேண்டும். அவ்வாறின்றி சாதாரண மக்கள் மீது வரி போடும் முறையில் இந்த வரி முறைகள் இருக்கின்றன.

டீசல் விலை ஏறுகிறது என்றால் பஸ் கட்டணம் உயரப் போகிறது. டீசல் விலை உயர்வு மட்டும் காரணம் அல்ல; பப்ளிக் செக்டார் இருக்கிறது, திருவள்ளுவர் கார்ப்பரேஷன் என்று வைத்திருக்கிறார்கள். கம்பிளீட்டாக மல்ட்டி நேஷனல்

1981 பிப்ரவரி 26] [திரு. மு. அம்பிகாபதி]

கார்ப்பரேஷன் மொனாபலீஸ் வந்து அதை எக்ஸ்ப்ளாய்ட் பண்ணுகிறார்கள். டயரிலேயிருந்து, சேஸிலேயிருந்து, டியூபுக்கு டன்லப்; சேஸ்சுக்கு லேலண்ட்.

இதைப்பற்றிக் கவலைப்படாமல் டீசல் விலை ஏறிவிட்டதால் வரி போட முயற்சிக்கிறார்கள். இது சாதாரண மக்களைப் பாதிக்கின்ற நிலையை ஏற்படுத்துகின்றது. ஆகவே, இந்த வரி விதிக்கும் முறையை நாங்கள் எதிர்க்கிறோம். நான் முன்பு சொன்னது போல், ஒரு முனை வரியாக, ஒரு கம்பெனிலேயிருந்து இன்னொரு கம்பெனிக்கு டிரான்ஸ்பர் செய்யும் பொழுதே வசூல் செய்ய வேண்டும்.

விமானப் பயணிகளுக்கு சௌகரியம் ஏற்படுகின்ற வகையில் விமான பெட்ரோலுக்கு 7 சதவீதம் என்றும், சாதாரண குடிசைகளிலே வாழுகின்ற மக்கள் பயன்படுத்துகின்ற மண்ணெண்ணெய்க்கு $8\frac{1}{2}$ சதவீதம் என்று குறிப்பிட்டிருப்பது ரொம்பவும் வருந்தத்தக்கது. எனவே, இந்த வரிவிதிப்பைப் பற்றி மறுபடியும் பரிசீலிக்க வேண்டும்.

தமிழக அரசுக்கு இருக்கின்ற சில வரிவிதிப்பு முறைகளையும் மத்திய அரசாங்கம் கபளீகரம் செய்வதற்கான சதி நடக்கிறது. இதையெல்லாம் எதிர்த்துப் போராட வேண்டுமென்றால் இடது சாரி ஜனநாயக அணியோடு ஆளுகிற கட்சி ஐக்கியமாக நில்லாமல், அவசரச் சட்டம் அந்தச் சட்டம் என்று கொண்டு வந்து குழப்பம் செய்யாமல் இப்படிப் பட்ட வரிவிதிப்பை வாபஸ் பெற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களை அன்புடன் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற சில அம்சங்களைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியாது. ஏனென்றால், இந்த நாட்டு மக்களுடைய, குறிப்பாக சாதாரண மக்களுடைய வாழ்க்கையோடு அதிகமாகத் தொடர்பு இருக்கக்கூடிய பல பொருள்களுக்கு, குறிப்பாக பெட்ரோல், டீசல் ஆயில், கெரசின் போன்ற இந்தப் பொருட்களுக்கெல்லாம் அதிகமான விற்பனை வரி இந்தச் சட்டத் திருத்தப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண மக்களுடைய வாழ்க்கை இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஏனென்றால், டீசல் போன்றவைகளுக்கு 9 சதவீதம் விற்பனைவ ரிவிதிப்பதன் காரணமாக மோட்டார் போக்குவரத்துக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 26

ஏற்கெனவே விற்பனை வரியைப் பொறுத்தவரையில் சொல்லும் நேரத்தில், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண மக்கள் வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய ஊறுகாய், அப்பளம் போன்ற பொருட்களுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இப்படி ஏழை மக்கள், சாதாரண மக்கள் வாங்கி உபயோகிக்கக்கூடிய பொருட்களுக்கு அதிக அளவில் விற்பனை வரியை விதித்து அவர்களுடைய சுமையை அதிகப் படுத்தக் கூடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று விற்பனை வரியைப் பொறுத்த அளவிலே இந்தச் சட்டத் திருத்தத்திலே, rubber latex comp und and rubber products, namely, latestfcam sponge என்ற முறையிலே ரப்பருக்குப் பிரத்தியேகமான சில வரிகள்' ஏற்கனவே இருந்த வரிகளைத்தான் கொஞ்சம் அழுத்தமாகத் திருத்தி அமைக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்திலே இடம்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே, ரப்பரைப் பொறுத்தவரைஅளவிலே, அதற்கு விற்பனை வரி போட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை சம்பந்தமாக, சில கருத்துக்கள் சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

குமரி மாவட்டம் என்பது, இந்த மாநிலத்திலேயே ரப்பர் உற்பத்தி செய்யக்கூடிய ஒரே மாவட்டம் என்ற முறையிலே, இந்த ரப்பர் மேலே விதிக்கப்பட்டிருக்கிற விற்பனை வரி காரணமாக , அதுவும் பர்ஸ்ட் பர்ச்சேசர் விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்ற நிலை தமிழகத்திலே ஏற்பட்டதன் காரணமாக, அதே நேரத்திலே, கேரள மாநிலத்திலே லாஸ்ட் கன்ஸ்யூமர்தான் அந்த விற்பனை வரி கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே, கேரளா அருகிலுள்ள எல்லை மாவட்டம் என்ற முறையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசுக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு எவேடிங் டாக்டிக்ஸ்ஸாக இன்றைக்கு ரப்பர் வியாபாரிகள் இதனைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

கேரள மாநிலத்திலே, குறிப்பாக, ரப்பர், டீ, காபி போன்ற பொருள்களுக்கான விற்பனை வரியில் க்ரோயர்களைச் சம்பந்தப்படுத்தும் முறையில் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே அந்த முறையிலே சட்டம் இல்லாததன் காரணமாக, பர்ஸ்ட் பர்ச்சேசர் சேல்ஸ் டாக்ஸ் கொடுத்தால் போதும் என்ற நிலை இங்கு இருப்பதன் காரணமாக, நேரடியாக, உற்பத்தியாளர்களிடம் வாங்கக்கூடிய சின்னஞ் சிறு டீலர்கள் விற்பனை வரியிலிருந்து தப்பித்துக் கொள்ள,

1981 பிப்ரவரி 26] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

ஒழுங்கான முறையிலே கணக்குகள் வைக்கப்படவில்லை, ஒழுங்கான முறையிலே பில்கள் போடப்படவில்லை. அதன் காரணமாக, ஆயிரக்கணக்கான ரூபாய், அரசுக்கு வரவேண்டிய சேல்ஸ் டாக்ஸ் அரசுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதோடு மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய உற்பத்தியாளர்களுக்கும், சின்னஞ்சிறு வியாபாரிகளுக்கும், சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளுக்கும், அடிக்கடி தகராறுகள் நடக்கின்றன என்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ரப்பர் பொருளைப் பொறுத்த அளவிலே, அதே மாதிரி கேரளாவிலிருப்பது போல் விற்பனை வரி இந்த மாநிலத்திலே ஏற்படுத்தினால்தான், அந்த ரப்பர் பொருள்களிலிருந்து எந்த அளவு விற்பனை வரி அரசுக்குக் கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த நேரத்திலே ஏழைகள் சம்பந்தமாக, சாதாரண மக்கள் சம்பந்தமாக, போடப்பட்டிருக்கக்கூடிய வரிகள், அவர்களுடைய சுமையை அதிகப்படுத்தும் முறையிலே இருப்பதால், சேல்ஸ் டாக்ஸை அதிகரிக்கக் கூடாது, அது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற பிரேரணையை வாபஸ் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே வருவாய்த்துறை அமைச்சரவர்கள் வாயிலாக, அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இதிலே சொல்லியிருக்கிறார்கள். சொல்கிற பொழுது, வரி போடக்கூடாது, வரி போடக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், நான் தெரிவித்துக் கொள்வேன்—புதிதாக வரியே போடவில்லையென்பதைத்தான் நான் முதலிலேயே சொல்ல விரும்புகிறேன். போடப்பட்டிருக்கிற வரியில் இருக்கிற சங்கடங்களை மாற்றி, இதற்கு முன்னால் எவ்வளவு வரி கொடுத்தார்களோ, அதே அளவு வரியைத்தான் இப்பொழுதும் கொடுக்கின்ற அளவுக்கு இது மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே, இதுவரையிலே வரி எப்படி போடப்பட்டதோ, அது பெட்ரோலாக இருந்தாலும், அல்லது எரிபொருள் வைத்திருந்தாலும், அதன் கொள்ளளவின் மேல், ''வால்யூம்' மேல் 'பெர் லிட்டர்' என்று வரி போடப்பட்டது. அப்படி போடாமல், விலையின் மேலே வரி மாற்றப்படுகிறது. அப்படி விலையின் மேலே வரி மாற்றப்படும்போது, இப்பொழுது மாற்றப்படுவதற்கு முன்னால், ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு எவ்வளவு வரி இருந்ததோ, அதே அளவு, விலையின் மேலே போடும்போது, அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் அப்படியே செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ்டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 26

[பிற்பகல் 12-10]

தவறாகச் சொல்லுகிறார்கள், புதிதாக வரி போடுகிறோம், வரி போடுகிறோம் என்று பூராவும் நுணுக்கமாகப் பார்க்காமல் சொல்லி இருப்பார்கள் என்று நான் கருதவில்லை. எப்போதோ போடப்பட்ட வரி, இந்த அரசுதான் அதிகமாக வரி போட்டது என்ற எண்ணத்தில் நுணுக்கமாகப் பார்க்காமல் வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே புதிதாக எங்கேயும் வரி போடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொல்லும்போது அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு, அவர்கள் 15 லிட்டர் பெட்ரோல் போட்டு கார் ஓட்டினால், இன்றைக்கு 15 லிட்டருக்கு எவ்வளவு வரி கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு வரி ஏறிவிட்டால் நாளைக்கும் அதே 15 லிட்டருக்கு அதிக வரி கொடுக்கவேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். உண்மை தான். ஆனால் நான் சொல்லுகிறேன். அடித்தளத்திலே உள்ள மக்கள் யாரும் கார்களை வைத்திருக்கமாட்டார்கள். அடித்தளத்திலே இருக்கக்கூடிய மக்களைப் பிரிக்க வேண்டும் என்பதற்காக கார் வைத்திருப்பவர்கள், கார் வைத்திருக்காதவர்கள் என்கிறபோது கூட கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் அடித்தளத்திலே இல்லாத மக்கள் என்று சாதாரணமாக கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் சொல்லுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். டீசலை இன்றைக்கு ஏழை விவசாயிகள்தான் பயன்படுத்துகிறார்கள். அதற்கு வரி போடலாமா என்று கேட்டார்கள். வரி எதையும் புதிதாகப் போடவில்லை. முன்பு போடப்பட்ட வரிதான் இப்போதும் அப்படியே வாங்கப்படுகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொல்கிறபோது ஐயோ, மண்ணெண்ணைக்கும் வரி போடுகிறீர்களே என்று சொன்னார்கள். மண்ணெண்ணைக்கும் வரி போடவில்லை. பல ஆண்டுகளாக மண்ணெண்ணைக்கு 8 சதவீதம் வரி வாங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு அல்ல, பல ஆண்டுகளாக இந்த வரி வாங்கப்பட்டு வருகிறது. அதையும் செக்ஷன் 70 நோட்டிபிகேஷன் மூலமாக இடையிலே மாற்றுகிறபோது 8½ சதவீதம் ஆக ஆகிவிட்டது. தொடர்ந்து அது

1981 பிப்ரவரி 26] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

$8\frac{1}{2}$ சதவீதமாகத்தான் இருந்து வந்தது. அந்த $8\frac{1}{2}$ சதவீதத்தை 8 சதவீதமாக மாற்றி இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து விமானங்களைப் பற்றிச் சொன்னார்கள். விமானங்களுக்கு முதலில் 7 சதவீதம் இருந்தது அதேதான் தொடர்ந்து இன்றைக்கும் விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைத் தொடர்ந்து சொல்ல வேண்டுமானால், அந்த விமானங்களுக்கு வரி எப்படி இருக்கிறது என்றால் பெட்ரோல், தமிழ்நாட்டில் 5 சதவீதம், ஆந்திராவில் 11 சதவீதம், கர்நாடகா $12\frac{1}{2}$ சதவீதம், கேரளம் 15 சதவீதம் என்றிருக்கிறது.

அதேபோல விமான எண்ணெய் தமிழ்நாட்டில் 7 சதவீதம், ஆந்திராவில் 10 சதவீதம், கர்நாடகத்தில் 16 சதவீதம், கேரளாவில் 8 சதவீதம் என்றிருக்கிறது. ஏன் இன்றைக்கு விமான எண்ணெய் 7 சதவீதம் வைத்திருக்கிறோம் என்றால், அதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். மறுமுறையும் நீங்கள் எண்ணிப்பார்த்தால், தமிழ்நாட்டில் 7 சதவீதம், ஆந்திராவில் 10 சதவீதம், கர்நாடகாவில் 16 சதவீதம், கேரளாவில் 8 சதவீதம், மகாராட்டிரத்திலே 25 சதவீதம் என்று இருக்கிறது. விமானம் எல்லா மாநிலங்களின் வழியாகவும் வருகிறது. அப்போது அங்கங்கே எண்ணெய் பிடித்துக் கொள்ளுகிறார்கள். எனவே, மற்ற மாநிலத்தைவிட குறைவாக இருந்தால் அதை இங்கே பிடித்துக் கொள்வார்கள் என்பதற்காகத்தான் 7 சதவீதமாக வைத்திருக்கிறோம். அந்த வரியை ஏற்றிவிட்டால் அவர்கள் ஆந்திராவிலே பிடித்துக்கொள்வார்கள், டெல்லியிலே பிடித்துக்கொள்வார்கள், இங்கே யாரும் பிடிக்கமாட்டார்கள். அதற்காகத்தான் அதை வைத்திருக்கிறோம்.

டீசல் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாடு 9 பைசா, ஆந்திராவில் 10 பைசா, கர்நாடகாவில் 16 பைசா, கேரளாவில் 20 பைசா, மகாராஷ்டிராவில் 9 பைசா என்று இருக்கின்றன. அண்டை மாநிலங்களில் இருப்பதை விட நம்முடைய மாநிலத்தில் வரி வீதங்கள் குறைவாகத்தான் உள்ளன. இன்றைக்கு புதிய வரிகள் எதுவும் விதிக்கவில்லை. ஏற்கெனவே போட்டுள்ள வரியைத்தான் மாற்றி அமைத்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்க சட்டமுன்வடிவு, 1981. ஆ.இ.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5, அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

ஈ. பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் நீக்க1 சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''ஆளுநர் அவர்களால் 13-11-1980 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1980) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்கிற தீர்மா னத்தை திருவாளர்கள் ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், துரைமுருகன் ஆகியோர் கொடுத்துள்ளனர். திரு. அ. ரகுமான் கான் தீர்மானத்தை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''ஆளுநர் அவர்களால் 13-11-1980 ஆம் தேதியன்று பிறப் பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/1980) இப்பேரவை நிராகரிக்கிறது''.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS